விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 178 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 01 திங்கட்கிழமை (15.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நயினைத் தாயாருக்கு இன்று கொடியேற்றம்



03ஆம் பக்கம் பார்க்க

உங்கள் வலம்புரியில்
இன்று முதல்
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
ஆனி மாத
இராசி பலன்கள்
வாசிக்கத் தவறாதீர்கள்

## காலி முகத்திடலில் பரத நாட்டிய உலக சாதனை



03ஆம் பக்கம் பார்க்க

## பிரபல்யமானவர்களுக்கு தனி நீதி என்ற பேச்சுக்கு இனி இடமில்லை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜேபால இடித்துரைப்பு


(கோப்பாய்)

நாட்டில் பிரபல்யமானவர்களுக்கு ஒரு நீதி ஏனையோருக்கு ஒரு நீதி என்ற பாரபட்சம் பார்க்கப்படாது.

நாட்டில் இனவாதமும் மதவாதமும் தலை தூக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று ஏழு என்புக்கூடுகள் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து ஒரு குழந்தையின் என்புக்கூடும் நான்கு சிறுவர்களுடைய என்புக்கூடுகள் உட்பட 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும்

15ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு ஒழிப்புவாரம் இன்று முதல் ஆரம்பம்

### பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டு இன்று (15)

16ஆம் பக்கம் பார்க்க

## "காணி நிலம் வேண்டும்"

# மா வட்டச் செயலகம் முன் பெரும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்கள் தமது காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு இன்றுடன் 36 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் விடுவிக்கப்படாத தமது காணிகளை விடுவிக்கக்கோரி இன்று கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி மனிதப் புதைகுழியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 355 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள

02ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மாவட்ட அரச அதிபர் நியமனத்தை விரைவுபடுத்துக

### அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்குமான வடக்கின் மக்கள் மன்றம் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் நியமனத்தை விரைந்து செயற்படுத்துமாறு அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்குமான வடக்கின் மக்கள் மன்றம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க


## ரயில்வே இணையம் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது

02ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் பொலிஸ் நிலைய திறப்பு விழாவில் நந்திக்கொடி



15ஆம் பக்கம் பார்க்க

### இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட

## பாதாள குற்றவாளிகளிடம் பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் தங்கியிருந்தபோது அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இரு பாதாள குற்றக்குழு உறுப்பினர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபர்கள்

15ஆம் பக்கம் பார்க்க

## எல் நினோ வானிலை மாற்றம் இலங்கைக்கு பாரிய ஆபத்து

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கை தற்போது எல் நினோ தாக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அஜித் விஜேமன்னே,

02ஆம் பக்கம் பார்க்க

## TIN இலக்கமின்றி 40 இலட்சம் பேர்

### இறைவரித் திணைக்களம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை (TIN) சுமார் 40 இலட்சம் பேர் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது வரை 13

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்காக பெருமளவு நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(காலி)

எத்தகைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாட்டின் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக, வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கல்வித்துறைக்கு பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

காலி, தடல்லை அல்-முபாரக் வித்தியாலயத்தில் கிராம மக்களால் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் விழா நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் பிள்ளைகளுக்கு நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு சேர்க்கும் நோக்கில், அனைத்து இரண்டாம் நிலைப்பாடசாலைகளுக்கும் தலா ஒரு திறன்பலகை



(Smart Board) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது 4,000 பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏனைய பாடசாலைகளுக்கும் இணைய வசதி வழங்கப்படும் என டிஜிட்டல் பொருளாதார அமைச்சு உறுதியளித்துள்ளது.

தொழில் நுட்பத்தைப் பிள்ளைகளுக்குச் சரியான முறையில் பயன்படுத்துவதற்காக, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட வகுப்பறைகள் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (க-7)

### ஐரோப்பிய...

நிலையில், எதிர்வரும் ஜுலை மாத முற்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளே எதிர்வரும் ஜுலை மாத முற்பகுதியில் நீதிமன்ற அனுமதியுடன் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளைச் சென்று பார்வையிடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். (க-7)

### எல் நினோ...

எல் நினோ காலநிலையானது பலவீனமான, மிதமான, வலிமையான என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் எல் நினோ வானிலை மாற்றத்தின் தாக்கத்தால் எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

தற்போது எல் நினோ நிலை பலவீனமாக இருந்தாலும், நவம்பர் மாதத்திற்குப் பின்னர் அது படிப்படியாக வலுப்பெற்று மிகவும் வலிமையான நிலையை அடையக்கூடும்.

மேலும் டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் எல் நினோ தாக்கம் மேலும் அதிகரிக்கும் சாத்தியம் 60 சதவீதத்திற்கும் மேலுள்ளது.

எல் நினோ வானிலையில் தற்போது இலங்கை பலவீனமான கட்டத்தில் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

### TIN இலக்க...

மில்லியனுக்கும் அதிகமானோர் இந்த TIN இலக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

18 வயது பூர்த்தியடைந்த அனைத்து நபர்களும் TIN இலக்கத்தைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், 2026 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்தப்பட்ட சட்டமூலத்திற்கு அமைய, தற்போது பல்வேறு தேவைகளுக்காக TIN இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல், வணிக நிறுவனங்களைப் பதிவு செய்தல், நிறுவனப் பங்குகளைப் பரிமாற்றம் செய்தல் மற்றும் கடன் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு TIN இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க-7)

# ரஷ்யாவின் எண்ணெய்க் கப்பலை கைப்பற்றியது பிரித்தானியா

(லண்டன்)

உக்ரைன் மீதான போருக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதற்காக, சர்வதேச தடைகளை மீறி மசகு எண்ணெயைக் கொண்டு சென்ற ரஷ்யாவின் 'நிழல் கப்பல்' ஒன்றை பிரித்தானிய ஆயுதப் படைகள் ஆங்கிலக் கால்வாய்ப் பகுதியில் அதிரடியாகச் சிறைபிடித்துள்ளன.



'ஸ்மிரோஸ்' என்ற பெயருடைய இந்த எண்ணெய்க் கொள்கலன் கப்பல், ரஷ்யாவின் உஸ்ட்-லுகா துறைமுகத்தில் இருந்து எகிப்து மற்றும் இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பிரித்தானிய பிரதமரின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கை குறித்துப் பேசிய பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர், இது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உக்ரைன் போருக்கு நிதி வழங்குபவர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றும், ரஷ்யாவின் வருவாயை முடக்கும் ஒரு பலத்த அடி என்றும் குறிப்பிட்டுள்ளார். (க-7)

### ரயில்வே...

நேற்று (14) சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் குறித்த திணைக்கள இணையத்தளத்தில் ரயில்களின் நேர அட்டவணை தொடர்பான விபரங்களை அறியும் பகுதி செயலிழந்துள்ளது.

இந்நிலையில், குறித்த இணையத்தளத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டு வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (க-7)

### மாவட்டச்...

உள்நாட்டு யுத்தம் காரணமாகக் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலி. வடக்கு பிரதேச மக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் அப்பகுதி மக்கள் இன்னமும் மீள் குடியேற அனுமதிக்காது, அப்பகுதி மக்களின் காணிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமது காணிகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என இன்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக, மயிலிட்டி மீள் குடியேற்ற அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது.

தமது போராட்டத்திற்கு கட்சி பேதங்கள் இன்றி, அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை பலாலி சந்திப் பகுதியிலும் இன்று காலை 08.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (க-7)

# இலங்கையில் பரவும் புதிய வகை டெங்கு

## பிரதி சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பரவி வரும் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு மரபணு மாற்றமடைந்த புதிய வகை டெங்கு வைரஸ் ஒன்றே காரணம் எனப் பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக மக்கள் மத்தியில் இந்த நோய் வேகமாகப் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போது பரவி வரும் டெங்கு வைரஸானது கடந்த காலங்களில் நாட்டில் பரவிய வைரஸ் வகைகளுடன் ஒப்பிடுகையில் பல மாற்றங்களைக் கொண்டுள்ளது.

இந்தப்புதிய வகை வைரஸ் தாக்கம் இதற்கு முன்னர் இலங்கை மக்களிடையே பரவலாகக்காணப்படவில்லை.

இலங்கையர்களில் பெரும்பாலானோருக்கு இந்தப் புதிய வகை வைரஸுக்கு (Variant) எதிரான நோய் எதிர்ப்புச் சக்தி உடம்பில் இல்லை என்பதால் மிக அதிகளவிலான



மக்கள் இந்தத் தடவை டெங்கு நோய்த்தாக்கத்திற்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்து (Vulnerable) காணப்படுகின்றது.

இதனால் நாடு முழுவதும் இந்நோய் மிக வேகமாகப் பரவக்கூடும்.

மேலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிகரிக்கக்கூடும் என்பதை எதிர்பார்த்து அதற்குத் தேவையான சுகாதார ஏற்பாடுகளை அமைச்சு ஏற்கெனவே மேற்கொண்டிருந்தது.

இருப்பினும் இம்முறை பரவும் வைரஸ் முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து, சுகாதார அறிவுறுத்தல்களைக் கடுமையான முறையில் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (க-7)


# பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையினுடைய பொதுக்கூட்டம் 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் பொதுச்சபை உறுப்பினர்கள் 22.06.2026ம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.


செயலாளர்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம்

(C-5842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நயினை நாகபூசணி அம்பாளுக்கு இன்று கொடியேற்றம்



(நயினாதீவு)

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று, எதிர்வரும் 28ஆம் திகதி காலை தேர் உற்சவமும், மறுநாள் 29 ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் இடம்பெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெறும். (8)

# புதிய பயங்கரவாத தடைச்சட்டம் இரண்டு மாதங்களில் நிறைவேற்றப்படும்

## அமைச்சர் விஜிதஹேரத் தெரிவிப்பு

**(கொழும்பு)........ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்படும் புதிய சட்டம் இரண்டு மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பரிந்துரைகளை உள்ளடக்கியும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கான சர்வதேச கட்டமைப்புகளுக்கு இணங்கவும் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய சட்டமூலம், "அரச பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்" என்று பெயரிடப்படும் என விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இந்த சட்டமூலம் இறுதி செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதன்பிறகு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சட்டமாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சில பரிந்துரைகள் இந்த சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன தலைமையிலான இக்குழு, பரந்த மற்றும் உள்ளடக்கிய சீர்திருத்த செயல்முறையை உறுதி செய்வதற்காக பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியதுடன், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுள்ளது.

இந்த வரைவு அறிக்கை தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புகள் மற்றும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே பிராஞ்ச் ஆகியோருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

"தற்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு என்ன நடக்கும் என்பது குறித்து சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இது தொடர்பில் கூடுதல் தெளிவு தேவைப்படுகிறது," எனக் குறிப்பிட்ட அமைச்சர், இந்த விவகாரம் விரைவில் தீர்க்கப்படும்என்றும்கூறினார்.(8)

# இலங்கையில் முதலீடு செய்ய முழு நம்பிக்கை உள்ளது

## சீன நிறுவனம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் பாய் யின்ஷான் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சீனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் முழு நம்பிக்கையுடன் இருப்பதாகவும் கொழும்பு துறைமுக நகரம் விசேட பொருளாதார வலயத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகளைத் தாம் வரவேற்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மிக முக்கிய முன்னுரிமையாகக் கருதப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்களுக்குத் தேவையான முழுமையான ஆதரவை வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது முதலீட்டாளர்களுக்கு மீண்டும் உறுதி அளித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர வளாகத்தை ஒரு சர்வதேச முதலீட்டு மையமாக அபிவிருத்தி செய்வது குறித்தும் இந்த சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.(8)

# ஆசனப்பட்டி அணியாத சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைகளில் ஆசனபட்டி அணியாத வாகன சாரதிகள் மற்றும் பயணிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பில் மேலும்,

வாகனங்களின் பின் இருக்கைகளில் ஆசனபட்டி பொருத்துவதற்கான காலக்கெடு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

எனவே எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதிக்குப் பின் இந்த விதிமுறையின் நடைமுறை வலுப்படுத்தப்படும்.

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்த மீறல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# காலி முகத்திடலை அலங்கரித்த 5000 கலைஞர்களின் பரத நாட்டியம்



(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடலில் நேற்று 5 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய நிகழ்வு உலக சாதனையாக அரங்கேறியது.

இந்தியாவைச் சேர்ந்த "சங்கமம் குளோபல் அக்கடமி" மற்றும் இலங்கையின் "சங்கமிழ் லியா ஹொலிடேஸ்" ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த மாபெரும் உலக சாதனை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. உலகின் மிகப் பெரிய பரதநாட்டியப் பயிற்சிக்கான கின்னஸ் உலகச் சாதனை முயற்சியாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் - கோண்டாவில் - காரைக்கால் அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஸ்டா மஹாகும்பாபிசேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 10.20 மணிவரை இடம் பெற வுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.55 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 9.55 மணிக்கு நிறைவடையும்.

எண்ணெய்க்காப்பு சாத்தும் அடியவர்கள் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் எண்ணெய்க்காப்பு சாத்த முடியுமென ஆலய ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (3)

# கோப்பாய் பொலிஸ் நிலையம் நேற்றையதினம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலையம் புதிய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு , நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் நிலையத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம். ஆனந்த விஜேபால திறந்து வைத்தார்.

நிகழ்வில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய , வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் , தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ச.பவானந்தராசா மற்றும் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி , யாழ்.மாவட்ட செயலர் ம.பிரதீபன் , பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (8-33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணமட்ட குத்துச்சண்டைப் போட்டி நெல்லியடி மத்திக்கு இரண்டு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி வீரர்கள் இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் கைப் பற்றி தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குத்துச்சண்டை போட்டி பருத்தித்துறை சென்தோமஸ் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த 56 கிலோ - 60 கிலோ எடை பிரிவில் ஏ. சதுஷன் தங்கப் பதக்கத்தையும் அதே எடைப் பிரிவில் எம். தமிழகன் வெள்ளிப் பதக்கத்தையும், 76 கிலோ - 81 கிலோ எடை பிரிவில் எம். அபினாஷ் தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றி தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். (3-90)

## 2ஆவது ரி-20 போட்டி

# மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி இலங்கை அபாரம்



கமில் மிஷாராவின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில் இலங்கை அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை அணி மேற்கிந்திய தீவுகளில் பயணம் செய்து 3 ஒருநாள், 3 ரி-20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் முதல் போட்டியில் இலங்கை வென்றது.

அத்துடன் முதல் ரி- 20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி-20 போட்டி ஜமைக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க ஆட்டக்காரர் குசால் மெண்டிஸ் 19 பந்தில் 31 ஓட்டங்கள் எடுத்தார்.

கமில் மிஷாரா அரை சதம் கடந்து 40 பந்தில் 61 ஓட்டங்களும், டாசன் ஷனகா 24 பந்தில் 58 ஓட்டங்களும் குவித்தனர்.

மேற்கிந்திய தீவுகள் சார்பில் ஷமார் ஜோசப் 3 விக்கெட்டுகளும், மேத்யூ போர்டே 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 195 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் களமிறங்கியது.

ஹெட்மயர், பவெல் ஜோடி அதிரடி காட்டியது. இந்த ஜோடி 46 பந்தில் 81 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஹெட்மயர் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து பாவெலும் 43 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து வந்த வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், மேற்கிந்திய தீவுகள் அணி 18.1 ஓவரில் 157 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் இலங்கை அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் ரி-20 தொடரில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகிக்கிறது.

இலங்கை அணி சார்பில் ஹசரங்கா, துஷ்மந்தா சமீரா தலா 3 விக்கெட்டுகளும், வெல்லாலகே 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (3)

# குத்துச்சண்டைப் போட்டியில் மு/விநாயகபுரம் சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டை போட்டியில் முல்லைத்தீவு விநாயகபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முதல் முறையாக பங்கு பற்றி சாதனை படைத்துள்ளது.

குறித்த போட்டியில் ரி. லோகிகா, கே.ஷர்மிதா ஆகியோர் தங்கப் பதக்கங்களையும் த.கரிசன் க.அபிநயா வெள்ளிப்பதக்கங்களையும் கைப்பற்றி பாடசாலை வரலாற்றில் முதல்முறையாக சாதனை படைத்துள்ளனர். (3)

## கில் அதிரடி ஆட்டம்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இந்தியா வெற்றி



இந்தியா- ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி தரம் சாலாவில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

மழையால் ஆட்டம் 25 ஓவராக குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பாட்டம் செய்த ஆப்கானிஸ்தான் 24.5 ஓவரில் 194 ஓட்டங்கள் சேர்த்து ஆல்அவுட் ஆனது.

குர்பாஸ் சதம் விளாசினார். இந்திய அணி சார்பில் குர்னூர் பிரார், ஹர்ஷ் துபே தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய இந்தியா சார்பில் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தில் இறங்கி 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கில் - கிஷன் இருவரும் சிறப்பாக ஆடினர்.

கிஷன் 34 ஓட்டங்களில் வெளியேற கில் அரைசதம் கடந்து 84 ஓட்டங்கள் குவித்தார்.

ராகுல் 39 எடுத்தார். 22.5 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டங்கள் எடுத்தது. இதன்மூலம் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பியுங்கள்

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**(கொழும்பு) ..............................**

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து ஆதாரங்கள் இருப்பதாகக் கூறுபவர்கள், வெறுமனே ஊடகங்களுக்கு கருத்துக்களை வழங்கி பகிரங்கக் குற்றச்சாட்டுகளை சுமத்துவதை விடுத்து, தங்களது சான்றுகளை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்தான விசார ணைகள் முறையாக முன்னோக்கி நகர்ந்து வருவதாகவும், இந்தத் தாக் குதல்களின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் உட்பட பொறுப் பானவர்களை அடை யாளம் காணும் பணிகளை அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப் பாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) சுரேஷ் சலே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள் ளமை குறித்து குற்றச்சாட் டுகளை முன்வைப்பவர்கள், தங்களின் ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, சட்டப்பூர்வ வழிகளின் மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

"அவர்களிடம் ஆதாரங்கள் இருந்தால், அவற்றை நீதி மன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும். உண்மைகள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், அதற் கான காரணங்களை நீதிமன் றமே விளக்கும்,"

அரசியல் வாதிகளான விமல் வீரவன்ச, உதய கம்மன் பில மற்றும் திலித் ஜயவீர உள்ளிட்ட ஒரு சிறிய குழு வினர், தற்போதைய விசார ணைச் செயல்முறைகளின் போது சுரேஷ் சலேவுக்கு நீதி கோருவதாகக் கூறி பிரசாரம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

நீதிமன்றச் செயல்முறை களுக்கு இடையூறு விளை வித்த பல நபர்களுக்கு எதிராக "நீதிமன்ற அவமதிப்பு" உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் ஏற்கனவே நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட் டுள்ளதாகவும், விசாரணை மற்றும் தாக்குதல்கள் குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக் கைகளுக்கு நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (8)

## இளைஞனின் உயிரை நொடிப்பொழுதில் காப்பாற்றிய ரயில்வே ஊழியர்



(கொழும்பு)

அளுத்கம ரயில் நிலையத்தில் ரயிலின் முன் பாய்ந்து உயிரை மாய்க்க முய ன்ற இளைஞனின் உயிரை, ரயில்வே ஊழியர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

குறித்த ஊழியர் தனது உயிரையும் பொருட்படுத்தாது காப்பாற்றும் காட்சி அங்கிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகி யுள்ளது. கடந்த 12ஆம் திகதி இரவு, மருதானையில் இருந்து பயணித்த ரயில் அளுத்கம ரயில் நிலையத்தை வந்த டைந்த போதே இந்த சம்பவம் நடந்துள்ளது.

ரயில் மேடையில் நின்றி ருந்த இளைஞன் திடீரென ரயிலின் முன் பாய்ந்த கணமே, அங்கிருந்த அளுத்கம ரயி ல்வே பாதுகாப்பு சேவை அலு வலகத்தின் ஊழியர் ஒருவர் மின்னல் வேகத்தில் செயற் பட்டுள்ளார்.

இதன் காரணமாக குறித்த இளைஞன் காப்பாற்றப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



கூவில் தீபஜோதி சனசமூக நிலையத் தின் கல்விக்கழ கத்தினால் உலக சுற்றாடல் தினத் தினை முன்னிட்டு மரம் நடுகை நிக ழ்வு அண்மையில் இடம்பெற்றது.

## அமெரிக்காவின் வரிவிதிப்புக்கு விரைவில் அரசாங்கம் பதிலடி

(கொழும்பு)

இலங்கையில் கட்டாய உழைப்பு முறை இல்லை என்று வாதிட்டு, அமெரிக்கா விதிக்க முன்மொழிந்துள்ள 10 வீதம் அல்லது 12.5 வீத கூடுதல் இறக்குமதி வரிகளுக்கு எதிராக இல ங்கை அரசாங்கம் பதிலளிக்கவுள்ளது.

அமெரிக்காவின் இந்த முன்மொ ழிவுக்குப் பதிலளிக்க இலங்கை அரசாங்கத்திற்கு வரும் ஜூலை 24 ஆம் திகதி வரை அவகாசம் உள் ளது.

இது குறித்து அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், இலங் கைக்குள் கட்டாய உழைப்பு என்ற ஒன்று கிடையாது.

எனினும், கட்டாய உழைப்பு இருப்ப தாகக் கருதப்படும் சில நாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட் களைப் பயன்படுத்துவதாலேயே, அமெ ரிக்காவினால் இலங்கை மீது இந்த கூடுதல் வரி விதிப்பு அபராதம் விதிக்க ப்பட்டுள்ளது.

"நாங்கள் இதற்கான பதிலை ஆயத்தம் செய்துள்ளோம், விரைவில் அதனை அமெரிக்க அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்வோம்," என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த மார்ச் மாதம், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி, 1974 ஆம் ஆண் டின் அமெரிக்க வர்த்தகச் சட்டத்தின் கீழ், கட்டாய உழைப்பால் தயா ரிக்கப்படும் பொருட்களின் இறக்கு மதிக்கான தடை களை திறம்பட அமுல்படுத்தத் தவறி யதாகக் கூறி இலங்கை உட்பட 60 நாடுகளை இலக்கு வைத்து விசார ணையைத் தொடங்கினார்.

சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரங்கள் சட்டத்தின் கீழ் முன்னர் விதிக்கப்பட்ட பல வரிகளை அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததைத் தொடர்ந்தே, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 301 இன் கீழ் இந்த விசார ணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## விசேட சுற்றிவளைப்பு 686 பேர் கைது!



(கொழும்பு)

பொலிஸ் மா அதிப ரின் நேரடி அறிவுறுத்த லுக்கு அமைவாக நாட ளாவிய ரீதியில் முன்னெ டுக்கப்பட்டு வரும் விசேட குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட சோதனை நடவடி க்கைக்கு அமைய பல் வேறு குற்றச்செயல்களு டன் நேரடியாகத் தொடர்பு டைய 18 முக்கிய சந்தேக நபர்கள் உட்பட 686 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடி க்கையின் போது, 28,566 நபர்கள் பொலிஸாரால் சோதனைகளுக்கு உட்படு த்தப்பட்டனர். இதன்போது, குற்றச்செயல்களுடன் நேர டியாகத் தொடர்புடையவ ர்கள் என அடையாளம் காணப்பட்ட686 சந்தே கநபர்கள் கைது செய்யப்ப ட்டுள்ளனர். (8)


## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



செல்வி.

**சுகந்தி சபாரட்ணம்**

((SLTS- I) BA,MA,PGDE)

**சேவை விபரம்**

*(வருடம் 23, மாதம் 11)*

- மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் 15.07.2002 - 25.03.2007
- யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை 26.03.2007 - 17.01.2010
- மன்/அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் 18.01.2010 - 02.01.2011
- யா/சென்தோமஸ் றோ.க.பெ. பாடசாலை 03.01.2011-09.09.2018
- யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 10.09.2018- 15.06.2026


எம் வித்தியாலயத்தின் சைவசமயம்,
தமிழ் மொழிப் பாட
ஆசிரியராய் வலம் வந்து மாணவர்
மனங்களில் நீங்கா இடம்பிடித்து
ஆசிரிய சேவைதனில் 24 வருட
சேவைகண்டு இன்று ஓய்வு காணும்
நீங்கள் நீண்ட ஆயுளும், நீடித்த சுகமும்,
நிறைந்த அமைதியோடும்
நீடுவாழ மணி விழா நன்னாளில்
வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்-அதிபர், ஆசிரியர் பணியாளர் நலன்புரிச்சங்கம்,
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை. (2410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெங்கு அறிகுறி இருந்தால் உடனடியாக சிகிச்சை பெறுங்கள்!

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்து



(கொழும்பு)

காய்ச்சல் இருப்பவர்கள் டெங்கு பாதிப்பு இருக்கலாம் என சந்தேகித்தால் உடனடியாக சிகிச்சை பெறுமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு, பொது மக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் வைத்தியர் கபில கண்ணங்கரா தெரிவிக்கையில்,

காய்ச்சல் இருந்தால் டெங்கு பாதிப்பு இருக்கலாம் எனச் சந்தேகித்தால் பொது மக்கள் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

நாட்டின் பல பகுதிகளில் இப்போதெல்லாம் டெங்கு வேகமாகப் பரவி வருகிறது.

எனவே உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவும், தங்களுக்கு டெங்கு பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டறியவும், மருத்துவ ஆலோசனையின்படி செயற்படவும் அவர் கேட்டுக்கொண்டார். (8)

# இ.போ.ச சாரதியுடன் முரண்பாடு

## தனியார் பேருந்து சாரதிக்கு பணி இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதியுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட தனியார் பேருந்துச் சாரதி ஒருவருக்கு இரண்டு நாட்கள் பணி இடைநிறுத்தம் செய்ய வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. விசுவமடுவிலிருந்து வவுனியா நோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதியே இவ்வாறு முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அதிகார சபையால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த விசேட விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பேருந்தின் சாரதியாகக் கடமையாற்றியவர் முரண்பாட்டில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, குறித்த சாரதிக்கு இரு தினங்கள் சேவையில் ஈடுபடுவதற்குப் பணி இடை நிறுத்தம் வழங்கி அதிகார சபையின் தலைவரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், பேருந்தின் உரிமையாளருக்கு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் வழித்தட அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்படும் என்ற எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது. (8)

# வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு “வட்டுக்கோட்டை - 50 எழுச்சி மாநாடு” எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


இந்நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (8)

# குருபூசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் ஸ்ரீ மத் வடிவேல் சுவாமிகளின் 36 ஆவது குருபூசை எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (8)

# வரணி இடைக்குறிச்சி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கண்காட்சி



(சாவகச்சேரி)

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக வரணி ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் திருமதி.ம.சிவநேசன் மற்றும் ஆசிரிய மத்திய நிலைய விரிவுரையாளர் நந்தகுமார் குகதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(8-30)

# மின்சாரம் தாக்கி இரு யானைகள் பரிதாபமாக உயிரிழப்பு


## ஒருவர் கைது

(கொழும்பு)

புத்தளம் - ஒக்கம்பிட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரும்புத் தோட்டம் ஒன்றிற்கு சட்டவிரோதமான முறையில் இழுக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் மோதியதாலேயே இந்த யானைகள் இரண்டும் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் ஒரு வயதுடைய குட்டி யானை ஒன்றும், 20 வயது மதிக்கத்தக்க மற்றொரு யானையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளன.



இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளும், வனஜீவராசிகள் பணிமனை அதிகாரிகளும் இணைந்து இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 200 | 450 | 160 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 400 | 700 | 700 |
| தக்காளி | 800 | 650 | 800 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 200 | 150 | 200 |
| கோவா | 250 | 350 | 350 | 260 | 250 |
| கரட் | 350 | 450 | 500 | 450 | 450 |
| பூசணி | 120 | 120 | 120 | 100 | 160 |
| புடோல் | 150 | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | -- | 200 |
| பாகற்காய் | 1400 | 2000 | 2000 | 2000 | 1500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 300 | 130 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 400 | 400 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 500 | 300 |
| லீக்ஸ் | 400 | 420 | 500 | 400 | 350 |
| பீற்றூட் | 450 | 450 | 500 | 400 | 500 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 300 | 450 |
| முருங்கைக்காய் | 1500 | 1200 | 450 | 1000 | 1000 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 800 | 420 | 500 |
| முள்ளங்கி | 200 | 250 | 200 | 180 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 |
| வல்லாரை | 100 | 70 | 80 | -- | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 280 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான கட்டத்தில் இலங்கை பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கை மீண்டுமொரு பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அதற்கான பல அறிகுறிகள் தற்போதைய பொருளாதார நடவடிக்கைகளில் தென்படத் தொடங்கியுள்ளதாகவும் நிதி மற்றும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நாடு ஏற்கனவே கடுமையான வெளிநாட்டு நாணய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்தது. அத்துடன், நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கமும் மத்திய வங்கியும் நாணயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

உள்நாட்டு வெளிநாட்டு நாணய சந்தையில் டொலர்களை விற்பனை செய்து ரூபாயின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த இலங்கை மத்திய வங்கி முயன்றது. எனினும் அது வொரு நிலையான தீர்வு அல்ல என நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமொன்றை நிறைவு செய்து கொண்டிருக்கும் பின்னணியிலும், நாடு மீண்டும் வெளிநாட்டு நாணய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் செலுத்தும் திறனில் அதிக ஆபத்துள்ள மட்டத்தில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தனது புதிய ஆய்வு அறிக்கையின் மூலம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் முடிவடைந்ததன் பின்னர், பொருளாதார மற்றும் வெளிநாட்டு நாணய நிர்வாகத்திற்கு இலங்கை தயாராக வேண்டும். அது மிகவும் சவாலானதாக இருக்கும் என நிபுணர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(8)

## கோடாவுடன் ஒருவர் கைது!



(கொழும்பு)

மஹபாகே பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொம்பகஹவத்த பகுதியில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மஹபாகே பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 10 பேரல்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த 1692 லீற்றர் கோடா மற்றும் சட்டவிரோத மதுபான தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மஹபாகே பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (8)


# Kilinochchi District Secretariat
## INVITATION FOR BIDS (IFB) - 2026
## Drainage Works

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for the Works mentioned in the table from qualified bidders who possess **CIDA** registration for the grade given below.

1. Bidding will be conducted through **National Competitive Bidding.**
2. Interested eligible bidders may obtain further information and inspect the Procurement Documents at the address given below.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the **CIDA** registration and qualification requirements listed below.

| Description of Works | Construction Cost Rs Mn. (without VAT in Mn) | CIDA Grade | Contract Period (in Days) | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Validity |
| Construction of Drainage Work at School Lane Kardikkunru, Nachchikudha KN/DMC/POO/MITI/2026/70 | 15.87Mn | C7 or Above (Irrigation and Drainage Canal) | 90 | 04.10.2026 | 240,000.00 | 01.11.2026 |
| Construction of Drainage Channel to mitigate Flood Impacts-Thirunagar north KN/DMC/Kar/Miti/2026/69 | 6.44Mn | C8 or Above ( Irrigation and Drainage Canal ) | 77 | 21.09.2026 | 100,000.00 | 19.10.2026 |

4. A complete set of bidding documents could be purchased **from 15.06.2026 till 03.07.2026** between **09.00 Hrs** to **15.30 Hrs** on working days. Upon submission of,
   a. **Bank Slip Rs.5000/=** paid to the **Bank of Ceylon** Account No. **7041986** of **"District Secretary, Kilinochchi"** as non - refundable fee.
5. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the Chief Accountant's Room, Finance Branch on or before **10.00 Hrs on 06 of July 2026.** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
6. A Pre Bid Meeting will be held on 25.06.2026 at 10.00 Hrs at Conference Hall, District Secretariat, Kilinochchi.
7. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**Kilinochchi District Secretariat,**
**Kilinochchi, T.P/ Fax:- 021 228 5352,**
**Web http://kilinochchi.dist.gov.lk**

(C-5838)


## விசுவமடு விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் அணிக்கு சீருடை வழங்கல்



(நெளுக்குளம்)

விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் அணிக்கான சீருடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலனின் ஒழுங்குபடுத்தலிலும், கேதீஸ் லேர்ணஸ் நிறுவன உரிமையாளரின் 70 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பிலும் இந்த சீருடைகள் அணிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தோழர்கள் விளையாட்டுக் கழகத்தின் தலைவர், கழக நிர்வாகிகள், வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

## தொலைபேசி கேபிள்களை திருடியவர்கள் போதைப் பொருளுடன் கைது

(கொழும்பு)

தொலைபேசி பரிமாற்றக் கோபுரங்களின் கேபிள்களை திருடிய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் இருவர், ஐஸ் போதைப் பொருளுடன் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 17 கிராம் 700 மில்லிகிராம் "ஐஸ்" போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ராகம பொலிஸ் பிரிவிற்குப்பட்ட தொலைபேசி கோபுரங்களில் இருந்து சுமார் 9 இலட்சத்து 22 ஆயிரத்து 750 ரூபாய் பெறுமதியான கேபிள்களை வெட்டித்திருடியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், திருடப்பட்ட பெருந்தொகையான கேபிள் துண்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)


## சேல்ஸ்மன் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை

சென்னை பெசன் வேல்ட்
63, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்

(C-5839)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## விபத்துக்குள்ளான இந்திய வானூர்தி
# 2 உயர் அதிகாரிகள் உட்பட ஐவர் உயிரிழப்பு





(டில்லி)

இந்திய வான்படைக்கு சொந்தமான AN-32 ரக வானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசாம் மாநிலத்தின் ஜோர் ஹாட் வானூர்தி நிலையத்தில் குறித்த வானூர்தியை தரையிறக்க முயன்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓடுதளத்தில் தரை இறங்கிய சில வினாடிகளில் வானூர்தி தீப்பிடித்து வெடித்ததாகக் கூறப்படுகிறது.

வானூர்தி விபத்துக்குள்ளானதில் 2 உயர் அதிகாரிகள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒரு அதிகாரி காயமடைந்து உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை என்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக்வும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)



# ஈரானின் அணுசக்தி மூல
# முழுமையாக அழி
# ட்ரம்ப் முழக்க



**(வோஷிங்டன்)**

**ஈரானில் உள்ள அணுசக்தி மூலப்பொருட்களை அமெரிக்கா பெற்று அவற்றை அழிக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அமைதி ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந்தச் சூழலில் அவர் மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சூழல் முற்றிலும் வழமைக்குத் திரும்பிய பின்னர் அமெரிக்கா ஈரானுக்குள் சென்று அங்கிருக்கும் அணுசக்தி மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அணுசக்தி மூலப்பொருட்களை ஈரானிலோ அல்லது அமெரிக்காவிலோ வைத்து செறிவூட்டல் தன்மையைக் குறைத்து முழுமையாக அழிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஈரானுடனும் ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளுடனும் இணைந்து பணி

# புகழ் பெற்ற கென்னடி மையக் கட்டிடத்திலிருந்து ட்ரம்பின் பெயர் நீக்கம்






(வோஷிங்டன்.)

வோஷிங்டன், டி.சி.யில் உள்ள புகழ்பெற்ற கென்னடி கலைநிகழ்ச்சி மையக் கட்டிடத்திலிருந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பெயரை நீக்கும் பணி தொடங்கியுள்ளது.

கட்டிடம் மற்றும் அதன் செயற்பாடுகளிலிருந்து ட்ரம்பின் பெயரை நீக்குவதற்கு நீதிமன்றம் வழங்கிய காலக் கெடுவை நீடிக்கக் கோரி கென்னடி மைய நிர்வாகம் விடுத்த அனைத்து கோரிக்கைகளையும் நீதிபதி நிராகரித்ததைத் தொடர்ந்து இது நிகழ்ந்துள்ளது.

தனது இரண்டாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தில், டொனால்ட்ட்ரம்ப் இந்த கலை மையத்தின் பழைய இயக்குநர்கள் குழுவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தனது நண்பர்கள் குழுவை நியமித்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

பின்னர் அவர்கள் கட்டிடத்தின் பெயரில் ட்ரம்பின் பெயரைச் சேர்த்தனர்.

பெரிய அளவிலான புனரமைப்புப் பணிகளுக்காக இந்தக் கலை மையத்தை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மூடுவதற்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் முடிவுக்கு நீதிபதி தடை விதித்தார். அதன்படி, கென்னடி மையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்திலிருந்து ட்ரம்பின் பெயர் ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதன் தலைமை சட்டத் துறை, இனிமேல் நிறுவன ஆவணங்கள், மின்னஞ்சல் கையொப்பங்கள் மற்றும் கடிதத் தலைப்புகளில் டொனால்ட் ட்ரம்பின் பெயருக்குப் பதிலாக கென்னடி மையம் என்ற பெயரை மட்டுமே பயன்படுத்துமாறு ஊழியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (3)

# சீனாவி
# பிச்சையெ
## இணையத்தி

(பியாங்யாங்)

சீனாவில் ரோபோ ஒன்று சாலையில் மண்டியிட்டு, கைகூப்பி பிச்சை எடுக்கும் காணொளிக்காட்சி இணையத் தளங்களில் பரவி வருகின்றது.

சமூக ஊடகங்களில் காட்டுத் தீயாய் பரவி வரும் இந்தக் காணொளியைப் பார்த்த இணையவாசிகள் பலரும் தங்களது கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர்.

குறிப்பாக, "AI ரோபோக்களால் மனிதர்களின் வேலை வாய்ப்புகள் பறிபோகும் என்று பயந்தோம், ஆனால் அவை பிச்சை எடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூலப்பொருட்கள்

# ழிக்கப்படும்!

ம்



யாற்றுவதை நாங்கள் எதிர்பார்த்தோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தச் செயல் முறைகள் அனைத்தும் மிக விரைவாகவும் எளிதாகவும் சுமுகமாகவும் நடக்கும் என நம்புகிறோம் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நடக்காவிட் டால் எங்களிடம் இதற்கான இறுதி மாற்று வழி உள்ளது ஆனால் அதனை மீண்டும் ஒருமுறை பயன் படுத்த வேண்டிய தேவை ஏற்படாது என நம்புகிறேன்," என்றும் ட்ரம்ப் எச்சரிக்கும் தொனியில் தெரிவித்துள்ளார். (3)

# தெற்கு லெபனானில் தொடரும் இஸ்ரேலின் உக்கிரத் தாக்குதல்கள்

(ஜெருசலேம்)

தெற்கு லெபனானில் கடந்த 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட தீவிர வான் வழித் தாக்குதல்களில், ஹிஸ்புல்லா அமைப்பின் பல போராளிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



அத்தோடு, அந்த அமைப்பின் ஏவுகணை ஏவு தளங்கள் மற்றும் இராணுவக் கட்டடங்கள் அழிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் உரிமை கோரியுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் இராணுவம் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 24 மணி நேரத்திற்குள் மட்டும் தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் 70இற்கும் மேற்பட்ட தளங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த மிகச் சமீபத்திய தாக்குதல்களில் லெபனானில் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், லெபனான் இராணுவ வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும் லெபனான் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா - ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகக் கூறப்படும் சூழலிலும், லெபனான் எல்லையில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. (3)

# ...வில் கைகேந்தி ...யபடுக்கும் ரோபோ

## ...ந்தில் தீயாய் பரவும் காணொளி

வேலையையும் விட்டு வைக்கவில்லை" என்று இணையவாசிகள் பலரும் நகைச்சுவையாகவும் கவலையுடனும் கருத்து தெரிவித்து வருகின்றனர். (3)





# அயதுல்லா அலி கமேனிக்கு ஜூலை 7 இல் இறுதிச் சடங்கு



(டெஹ்ரான்)

ஈரானின் மறைந்த உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச்சடங்கு நிகழ்வுகள் வரும் ஜூலை 4ஆம் திகதி தலைநகர் டெஹ்ரானில் தொடங்கி, ஜூலை 9 அன்று அவருடைய சொந்த ஊரான மஷ்ஹாத் புனித நகரில் உடல் அடக்கத்துடன் நிறைவடையும் என்று ஈரான் அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த பெப்ரவரி 28 அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலின் முதல் நாளிலேயே கமேனி கொல்லப்பட்டார்.

86 வயதான அவர், ஈரானை சுமார் 36 ஆண்டுகள் வழிநடத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய சட்டப்படி இறந்தவர்களின் உடலை 24 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்ய வேண்டும் என்றாலும், போர் போன்ற அசாதாரண சூழ் நிலைகளில் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

டெஹ்ரானில் உள்ள கமேனியின் அதிகாரப்பூர்வ இல்லத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அவரது மருமகளும் கொல்லப்பட்டார். அந்த தாக்குதலில் காயமடைந்த கமேனியின் 56 வயது மகன் மொஜ்தபா தற்போது ஈரானின் புதிய உச்ச தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்நிலையில், ஜூலை 4 இல் தொடங்கும் இறுதிச் சடங்கு ஊர்வலம், ஜூலை 7 அன்று தெற்கு டெஹ்ரானில் உள்ள கோம் புனித நகரைக் கடந்து, இறுதியாக ஜூலை 9 அன்று மஷ்ஹாத் நகரில் உடல் அடக்கம் செய்யப்பட உள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அஞ்சறைப் பெட்டி

"உணவே மருந்து மருந்தே உணவு" என்பது எமது பாரம்பரியமருத்துவக் கொள்கையாகும். அஞ்சறைப் பெட்டி என்பது எமது சமயலறையில் இருக்கும் ஒரு மிகச்சிறிய அஞ்சறைப் பெட்டி. ஆனால் அதுவே பல நோய்களைத் தீர்க்கும் அரு மருந்துப் பெட்டியாக செயற்படுகிறது.

இது பித்தளையால் ஆக்கப்பட்டிருக்கும் அல்லது மரத்தால் ஆக்கப்பட்டு சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

இதற்குள் களஞ்சியப்படுத்தப்படும் பொருட்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும். 5 பொருட்கள் அல்லது ஏழு பொருட்கள் அல்லது ஒன்பது பொருட்களாக களஞ்சியப்படுத்திப் பயன்படுத்துவார்கள்.


இப்போது இவ் அஞ்சறைப் பெட்டியிலுள்ள பொருட்கள் தாளிசத்திற்கும் சமையலுக்கும் பயன்படுகிறது என நினைக்கிறார்கள்.

அஞ்சறைப் பெட்டி என்ற சொற்பதமும் தற்போது பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் முன்னொரு காலத்தில் இதற்கு மதிப்பு அதிகம். இதிலுள்ள அனைத்துமே மதிப்பு மிக்க மூலிகைப் பொருட்களாகும்.

ஒரு காலத்தில் இது பிரதானமாக மதிக்கப்பட்டதன் காரணமாகவே இதற்கு அஞ்சனப் பெட்டி என்ப பெயரிட்டு அதற்கு மரத்தால் தயா ரிக்கப்பட்டு சிறு பகுதிகாளாகப் பிரிக்கப்பட்டு மூடியும் போட்டு பயன்படுத்தி வந்தார்கள்.

அஞ்சனம் என்றால் வாசனை என்று பொருள். இன்று அது அஞ்சறைப் பெட்டி என அழைக்கப்படுகிறது. இவ் அஞ்சறைப் பெட்டிக்குள் இருக்கும் அனைத்துமே மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

பெரும்பாலும் எம் முன்னோர்கள் உணவில் பயன்படுத்



திய அனைத்துமே மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை உணவிற்கு சுவை தருவதோடு பல நோய்களுக்கு அருமருந்தாகிறது.

நம் அஞ்சறைப் பெட்டியில் இருக்கும் முக்கிய பொருட்களும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவமும் பற்றி நோக்கில் பொதுவாக மிளகு, சின்னச்சீரகம், மஞ்சள், ஓமம், பெருங்காயம், மல்லி, கடுகு, வெந்தயம், சிலர் உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு என பிரதேசத்திற்குப் பிரதேசம் இப்பொருட்களைப் பயன்படுத்துவர். எமது முன்னோரில் சில பிரதேசத்தவர் கடுக்காயையும் அஞ்சறைப்பெட்டியினுள் களஞ்சியப்படுத்திப் பயன்படுத்துவர். பொதுவாக மிளகானது நச்சு முறிவாக செயற்படும்.

வயிற்றிலுள்ள வாயுவை அகற்றி ஜீரண சக்தியை மேம்படுத்தும். சளி, கோழை மற்றும் இருமலைக் குணப்படுத்த மிளகு அவசியம்.

இதில் விற்றமின்கள் A, E,K மற்றும் பொட்டாசியம் போன்ற பல சத்துக்கள் நிறைந்துள்ளன. அத்துடன் கறுப்பு மிளகின் B6, நியாசின் மற்றும் ஃபோலேட் போன்ற ஏராளமான சத்துக்கள் உண்டு. எனவே மொத்தத்தில் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது.

வெந்தயத்தில் உள்ள சப்போனின் மற்றும் நார்ச்சத்துக்கள் நவீன அறிவியல் ஆய்வுகளின் படி பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைகிறது. வெந்தயத்திலுள்ள அமினோ அமிலம் இன்சுலின் சுரப்பை தூண்டுகிறது. இது நீரிழிவு நோயாழிகளுக்கு.இரத்த சக்கரை அளவைக் குறைக்க உதவுகிறது. மேலும் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைக்க வெந்தயம் உதவுகிறது. இதிலுள்ள அதிக படியான நார்ச்சத்து செரிமான கோளாறுகளை சரிசெய்து மலச் சிக்கலையும் தடுக்கிறது.

வெந்தயத்திலுள்ள டையோஸ் ஜெனின் ஆனது ஈஸ்ட ரோஜன் ஹோமோனை போன்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளதால் பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்துப் பிரச்சினைகளை சமனிலைக்கு கொண்டு வர உதவுகிறது.

பெருங்காயமானது குடல் தசைகளைத் தளர்த்துவதன் மூலம் வாய்வுத் தொல்லை மற்றும் பிடிப்புக்களை குறைக்கிறது. ஆராய்ச்சிகள் இது இரப்பைப் புண்களைக் தடுத்து. அஜீரணக் கோளாறுகளை சரி செய்ய உதவுவதாக கூறுகிறது. இது இரத்த நாளங்களைத் தளர்த்தி இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. இது இயற்கையான இரத்த மெலிபியா (Natural blood thinner) செயற்பட்டு இரத்த உறைதலையும் தடுக்கும். ஆய்வுகளின் படி இதன் ஆவியாகும் எண்ணெய்கள் (Volatile oils) நுரையீரலின் வழியாக வெளியேறும் போது ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் இருமல் போன்ற சுவாசப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் தருகிறது. மற்றும் மஞ்சளைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை பல மடங்கு அதிகரிக்கும்.

மூட்டு வலி போன்ற பிரச்சினைகளில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும், வலியைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. அத்துடன் உடம்பிலுள்ள நச்சுக்களை வெளியேற்றி கல் ஈரல் செயற்பாட்டை சீராக்கும். மேலும் அஜீரணக் கோளாறுகளை சரி செய்யும். மேலும் மல்லியில் விற்றமின் A,C மற்றும் K ஆகியவை இதில் நிறைந்துள்ளதால் கண் பார்வை மற்றும் என்புகளின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது மற்றும் வயிற்று உப்பிசம் மற்றும் அஜீரணக் கோளாறுகளைத் தடுத்து செரிமான மண்டலத்தை சீராக செயற்பட வைக்கிறது.

சீரகமானது செரிமானத்தை சீராக்க உதவுவதுடன் கிட்டத்தட்ட 1 தேக்கரண்டி சீரகத்தை தினம் எடுத்தால் 4 மில்லி கிராம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இரும்புச்சத்து கிடைக்கிறது. ஆனாலும் இவ் வாசனை மூலிகைப் பொருட்களை குறிப்பிட்ட அள வின் படி எடுக்க வேண்டும். உடல் எடையைக் குறைக்க விரும்பினால் சாப்பிடுவதற்கு முன்னர் 1 தேக்கரண்டி சீரகப் பொடியை வெந்நீருடன் எடுக்க லாம் அத்துடன் உணவுக் கட்டுப்பாடும் இருக்க வேண்டும்.

மலக்கட்டு இருப்ப வர்களுக்கு ஒரு கடுக்காயின் (உலர் கனி) வெளித்தோலை 100 மில்லி வெந்நீரில் 1 மணி நேரம் ஊற வைத்து எடுக்க மலக்கட்டு நிற்கும். இவ்வளவு மருத்துவ குணங்கள் நிறைந்த அரு மருந்துகளே அஞ்சறைப் பெட்டியில் வைத்துப் பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்வியலை நீண்ட கால வாழ்வியலுக்கு பயன்படுத்தியுள்ளார்கள்.

எனவே இப்பொருட்களை வெறுமனே தாளிசத்திற்குப் பயன்படுத்தாமல் மருத்துவ நோக்கில் பயன்படுத்த வேண்டும். அத்துடன் மரப்பெட்டிகளில் பாதுகாப்பது இன்னும் அப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதாக அமையும்.

# இராசிபலன்

15.06.2026
ஆனி 01, திங்கட்கிழமை
அமாவாசை முற்பகல் 9.33 மணி வரை
மிருகசீரிடம் முன்னிரவு 9.13 மணி வரை

சுப நேரம் 11.53 -1.23 மணி வரை
இராகு காலம் 7.23-8.53 மணி வரை
நயினை நாகபூசணி கொடியேற்றம்

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகும் நாள்.




தொலை பேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,




சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்,




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுப காரியப் பேச்சுக்களில் முன் னேற்றமுண்டு, வியாபார விருத்தியுண்டு.




செய் தொழில் மேன்மையுண்டு, இயல் பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்,




புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,

எதையும் உன்னால் செய்ய முடியாது என்று மலைக்காதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# தரிசனம் 02

XXIII

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்





*(10.06.2026 தொடர்ச்சி)*

திருக்கோணேச்சரம் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு தொல்லியல் திணைக்களம் தடையாக உள்ளதென்ற கருத்தை இவ்விடத்தில் எழுதிய பேனாமை காய்வதற்கு முன்னதாக, முல்லைத்தீவு குருந்தூர் மலையில் சிவனாலயம் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என பௌத்த சாசன அமைச்சுக்கு தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது எனும் செய்தி அறியப்படுகிறது.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளரினால், குருந்தூர் ஆதிசிவன் ஐயனார் கோவில் புனரமைப்புத் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்திற்கே தொல்லியல் திணைக்களம் மேற்குறித்த பதிலை அனுப்பி வைத்துள்ளதுடன், அதன் பிரதி தேசிய மரபுரிமைகள் பிரிவின் ஊடாக, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு, தொல்லியல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.செனரத் விக்கிரமசிங்கவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

குருந்தூர் விகாரை அமைந்துள்ள நிலமானது, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பௌத்த சான்றுகளைக் கொண்ட ஓர் இடமாகும். அங்கு இந்துக் கோவில் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் வெளிப்பட வில்லை.

மேலும் 1940 ஆம் ஆண்டில் 09ஆம் இலக்க தொல் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் பிரகாரம் தொல் பொருள் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு நிலப்பரப்பிற்குள் ஏதேனும் ஒரு புதிய கட்டடத்தையோ அல்லது நிர்மாணத்தையோ மேற்கொள்வது சட்ட விரோதமானது என்பதுடன், அது 34 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குருந்தூர் மலையில் உள்ள பௌத்த மதத் தலத்துக்குள் ஓர் இந்துக் கோவிலை நிர்மாணிப்பதன் மூலம் ஏதேனும் ஒரு தரப்பினரால் புனிதமாகவும் கௌரவத்துடனும் மதிக்கப்படும் ஒரு குழுவினரைத்தூண்டும் வகையில் செயற்படுவது மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 31(ஆ) பிரிவின் கீழ் ஒரு குற்றமாகும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இவ்விடத்தில் ஓர் இந்துக்கோவிலை நிர்மாணிப்பதற்கோ அல்லது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கோ அனுமதி வழங்க முடியாது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் காலத்தால் முற்பட்ட தலம். அங்கு காலங்காலமாக தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடு செய்து வருகின்றனர்.

இது அவர்களுடைய மரபாயிற்று. அதேநேரம் குருந்தூர் மலை ஆதி சிவன் ஆலய வழிபாட்டில் எந்தத் தடையும் எப்போதும் இருந்ததில்லை.

ஆம், யுத்தம் முடிந்த பின்னர் 2018 ஆம் ஆண்டு இராணுவத்தின் துணையுடன் குருந்தூர் மலைக்கு வந்த புத்த பிக்கு ஒருவர், அங்கு புத்தர் சிலையை வைக்க முற்பட்ட போது, அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினர்.

இதன் காரணமாக இவ்விவகாரம் நீதிமன்றப்படி ஏறுகிறது.

இப்போது நீதிமன்றில் அந்த வழக்கு நிலுவையில் இருக்கின்றதாயினும், குருந்தூர் மலையில் ஆதிசிவன் வழிபாட்டை மக்கள் நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

நிலைமை இதுவாக இருக்கையில், குருந்தூர் மலையில் சிவன் ஆலயமோ, அன்றி இந்து ஆலயங்களோ இருந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லையென தொல்லியல் திணைக்களம் கூறுவது அதன் இந்து சமய எதிர்ப்பை அப்பட்டமாக வெளிப்படுத்திநிற்கிறது.

ஆக, ஒரு காலத்தில் அந்நியர்களால் எங்கள் இந்து ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.அவ்வாறு இந்து ஆலயங்களை தரைமட்டமாக்கிய பின்னர், அதே இடத்தில் தேவாலயங்களை அமைத்த குடியேற்றவாத நாடுகள்; நம் இந்து சமயத்திற்குச் செய்த கொடுமையின் விளைவை இன்னமும் ஈழத்து சைவத் தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது, குடியேற்றவாத நாடுகள் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிவிட்டு வெளியேறிவிட்டாலும் அன்று மதம் மாறிய நம்மவர்கள், இன்று வரை தங்கள் தாய்ச் சமயமாகிய-தங்கள் மூதாதையர்கள் காலாகாலமாக தங்கள் உயிராகவும் உடலாகவும் கருதிய சைவ சமயத்தை எதிர்ப்பதை தீவிரம் காட்டுவது தான் மிகப் பெரிய துரதிஷ்டம்.

உண்மை. இலங்கை அந்நியர்களின் வசமாகிய போது மதமாற்றம் என்பது சிங்கள மக்களிடையேயும் நடந்தாகியது.

பௌத்த சிங்களவர்களில் ஒரு சிறு பகுதியினர் கிறிஸ்தவ சமயத்திற்கு மதமாறினர். அவ்வாறானதொரு நிலைமைகளை கால சூழல்கள் ஏற்படுத்திற்று.

ஆம், உயர் கல்வி கற்பதற்கும் அரச நியமனங்களைப் பெறுவதற்கும் அத்தகையதொரு தேவை ஏற்பட்டது எனலாம்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1065





"ஐயா! தங்களுக்குத் தண்டனை கொடுக்கவோ, பிராயச்சித்தம் சொல்லவோ, நான் முற்படமாட்டேன். தாங்கள் என் பாட்டனாரின் ஸ்தானத்தில் உள்ளவர். என் தந்தையின் போற்றுதலுக்கு உரியவர். உண்மையாகவே, தங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன்"

"அப்படியானால், உடனே கேள் அம்மா! வெறும் பேச்சுப் பேசுவதற்கு இப்பொழுது நேரமில்லை." "கொடுப்பதாக வாக்கு அளியுங்கள்!"

"உனக்கும், உன் குடும்பத்துக்கும் நான் செய்து விட்ட துரோகத்துக்கு நான் கொடுக்கக் கூடியது எதுவும் ஈடாகாது. நீ எது கேட்டாலும் கொடுக்கிறேன். சீக்கிரம் கேள்!"

"இளையராணி நந்தினிதேவியைத் தாங்கள் ஒன்றும் செய்வதில்லை என்று வாக்கு அளிக்க வேண்டும். அதுதான் நான் கோரும் வரம்!"

"அம்மா! இது எது என்ன விளையாட்டா? விளையாட இதுதானா சமயம்? என் முதுமைப் பிராயத்தில் நான் புத்தி கெட்டுப்போனது உண்மைதான். அதற்காக என்னை முழுப் பைத்தியக்காரனாக்கி விடப் பார்க்கிறாயா? அந்தச் சதிகாரிக்கு நான் தக்க தண்டனை கொடுக்காவிட்டால், மற்ற சதிகாரர்களை எப்படித் தண்டிக்க முடியும்? என் கையினால் அவளைக் கொன்றுவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்.

என் மனத்திலுள்ளதையெல்லாம் சொல்லிவிட்டு, இந்தக் கிழவனை அவளால் கடைசி வரையில் ஏமாற்ற முடியவில்லையென்பதை எடுத்துக் காட்டி விட்டு, அவளை என் வாளினாலேயே வெட்டிக் கொல்லுவேன். அதற்குக் குறைந்த தண்டனை எதுவும் அவளுக்குக் கொடுத்தால் நியாயம் செய்தவனாக மாட்டேன். அதற்குப் பிறகு, எனக்கு என்ன நியாயமான தண்டனை என்பதையும் யோசிப்பேன். போ! அம்மா! போ! உன் தந்தையையும், தம்பியையும் இன்று வரப்போகும் கண்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்!"

"செய்கிறேன், ஐயா! ஆனால் என் சகோதரியைப் பாதுகாக்கவும் முயற்சி செய்ய வேண்டாமா? இளையராணி நந்தினி என் சகோதரி. அவருக்குத் தாங்கள் என்ன தீங்கு செய்தாலும், அதுவும் சோழ குலத்துக்குச் செய்த துரோகமாகும்!"

பழுவேட்டரையர் எல்லைக் கடந்த திகைப்பில் ஆழ்ந்தார். "நான் இன்னமும் கனவு கண்டு கொண்டிருக்கிறேனா?" என்று அவர் உதடுகள் முணு முணுத்தன.

"இல்லை, இல்லை! தாங்கள் கனவு காணவில்லை. தாங்கள் காண்பதும் கேட்பதும் உண்மைதான். சிறிது யோசித்துப் பாருங்கள் பழைய சம்பவங்களை நினைத்துப் பாருங்கள். என் சகோதரன் அருள் மொழி வர்மனைக் காவேரியில் முழுகிப் போகாமல் ஒரு மாதரசி காப்பாற்றியது நினைவிருக்கிறதா? அவள்தான் இளையராணி நந்தினியின் தாயார்.

இளைய ராணியைத் தாங்கள் மணம் புரிந்து அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்த நாளில், என் தந்தை நினைவிழந்து விழுந்தது நினைவிருக்கிறதா? இளைய ராணியின் அன்னையைக் காண்பதாக நினைத்தே சக்கரவர்த்தி மூர்ச்சை அடைந்தார். அவள் இறந்து விட்டதாக வெகுகாலம் எண்ணிக்கொண்டிருந்தார். ஆகையால் திடீரென்று இளைய ராணியைப் பார்த்ததும் ஞாபகத்தை இழந்தார்."

# நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

## அருள்மழை பொழியும் அன்னை நாகபூஷணியே...

அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தைத் தன்னகத்தே கொண்டு பெருமையுடனும் புகழுடனும் விளங்குவது நயினாதீவாகும். நாற்புறமும் கடல் சூழ்ந்த நயினை மண்ணில் நாகபூஷணி அம்பாள் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்மழை பொழிகின்றாள். இதனையே பின்வரும் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றது.

துலங்குவளம் கெழுமுகின்ற
இலங்கையினில்
வடபாலே சோதியாகி
**இலங்குகின்ற**
**நாகபூஷணித்தாய் தான்**
**கோயில் கொண்ட எழிலார் தீவு.**

அன்னையின் பராபவ வருஷ மஹோற்சவம் இன்று 15.06.2026 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெற உள்ளன. எதிர்வரும் 28.06.2026 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற்சவமும், 29.06.2026 திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று 30.06.2026 செவ்வாய்கிழமை தெப்போற்சவத்துடன் ஆலயப் பெருந் திருவிழா நிறைவு பெற உள்ளது.



அன்னையின் மஹோற்சவ காலத்தில் நயினைமண் புத்தெழில் பெற்று புதுப்பொலிவுடன் இருப்பதைக் காண முடியும். நாள்தோறும் அலை கடல் தாண்டி அன்னையின் அழகுக் காட்சியைக் காண்பதற்கு அலையலையாக பக்த அடியார்கள் நாட்டின் பல இடங்களில் இருந்தும் வருகை தருவதைக் காண முடியும்.

அடியார்கள் வருகையை அழகு மிகு அம்பாளின் ஆலய இராஜ கோபுரம் வரவேற்று நிற்கும் என்றால் மிகையாகாது. ஆலயச் சூழலில் காணப்படும். வேப்பமரச் சோலைகளின் இளந்தென்றல் அடியார்களுக்கு இதமளித்துக்கொண்டிருக்கும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைந்துருகி வரும் அடியார்களின் தொல்லை வினை தரும் தொல்லைகளை அன்னையவள் நீக்குகின்றாள். "தேடி உனைச் சரணடைந்தோம் தாயே" என்று நாடித் தேடி வரும் பக்தர்களின் பாவவினை நீக்கி நிறைவாழ்வு அளிக்கின்றாள்.

மஹோற்சவ காலத்தில் நடைபெறும் அன்னையின் கையிலைக் காட்சி உற்சவம் காண்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும். அருள்பொழியும் கையிலைக் காட்சி உற்சவமானது

தன்னிலமை மன்னுயிர்கள்
சாரத் தரும் சக்தி
**பின்னமிலான் எங்கள் பிரான்**

என்ற உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன் அடிகளை வலியுறுத்திக்காட்டும் இக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைவதுடன் அடியார்கள் மனதில் என்றும் நீங்காது பதிந்திருக்கும். அன்னையவள் பூத்தவளாக புவனம் பதினான்கையும் காத்தவளாக அகிலமெலாம் நிறைந்த அகிலாண்டேஸ்வரியாக ஆதிபராசக்தியாக விளங்குகின்றாள்.

அம்பிகையின் தேர்த்திருவிழாக் காலத்தில் அடியார்கள் தேரினைக் கண்டு வியப்படைவார்கள். தேரின் அடிப்பாகத்தில் காணப்படும் நூற்றுக் கணக்கான சித்திரப் பாவைகளின் அலங்காரத்தைக் காண்பதிலும் அவை கூறும் புராண இதிகாசக் கதைகளை அறிந்து கொள்வதிலும் அடியார்கள் மிகுந்த ஆர்வமாக இருப்பதைக் காண முடியும்.

சர்வமத சந்நிதியாக விளங்கும் அன்னையின் ஆலயத்திற்கு நாள்தோறும் வரும் அடியார்கள் தீராப் பிணி நீங்கிச் செல்வது மட்டுமல்லாது பசிப்பிணியும் நீங்கிச் செல்வார்கள். "அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்" என்ற மணிவாசகரின் திருவாசகத் தேன்துளிக்கேற்ப அன்னையவள் ஆலயத்திற்கு வந்து செல்லும் அடியார்கள் மனநிறைவு பெற்றுச் செல்வதைக் காண முடியும்.

அம்பிகையின் மகோற்சவக் காலங்களில் ஆலயம் சென்று அன்னையின் புகழ் பாடி அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**நயினை நாகமணிப் புலவர் அருளியது.**

**பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்**
**பேணலாலன்னை பெற்றிடுவோர்**
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
**உதவலால் அன்னை யெக்கையும்**
**சொற்றதாலன்னை உகைடுவோனும்**
**தொழு தலானன்னை யென்றென்றும்**
பற்றதாங் கருணை பொழி தலாலன்னை
**பராபரை நாக பூஷணியாள்.**

**கௌரி விக்னராஜேஸ்வரன்**
**(நயினைச் செல்வி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை.
*- மகாத்மா காந்தி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட சர்வதேச சமூகம் நேரில் வர வேண்டும்

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் என்புக் கூடுகளின் எண்ணிக்கையை நினைக்கும்கால், எங்கள் தமிழினத்திற்கு நடந்த கொடுமை எத்தகையதென்பதை அறிய முடியும்.

ஆம், செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து 350 இற்கும் மேற்பட்ட மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வகழ்வுப் பணிகள் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் தொல்லியல்துறைப் பேராசிரியர் சோமதேவாவின் பிரசன்னத்துடன் இடம்பெறுவது மன ஆறுதலைத் தருகிறது.

தவிர, குறித்த செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்விற்கான நிதியை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஒதுக்கியிருப்பதும் ஆறுதலுக்குரியது.

ஆயினும் ஒரு சிறிய இடத்தில் இத்துணை மனித என்புக் கூடுகள் தனித்தும் கூட்டாகவும் குவிந்தும் கிடப்பதென்பது எப்படிச் சாத்தியமாகும் என நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

ஆம், அதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சில உடலங்கள் இந்து மயானத்தில் புதைக்கப்படுகின்ற நிலைமைகள் உண்டு.

ஆனால் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து குவியலாக - கூட்டாக என்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன எனும் போது இஃது தமிழ் இனத்திற்கு நடந்த கொடூரத்தின் வெளிப்பாடாகும்.

எனினும் செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்படும் மனித என்புக்கூடுகள் தொடர்பில் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இப்போது அமைதி காப்பதுதான் ஏனென்று தெரியவில்லை.

அதிலும் செம்மணி மனிதப் புதைகுழியைக் காரணம் காட்டி, செம்மணியின் நுழைவாயிலுக்கு வடக்குத் திசையாக அமையவிருந்த சங்கிலிய மன்னனின் மாதிரி அரண்மனையைத் தடுப்பதில் தீவிரமாக இருந்தவர்கள் - மாதிரி அரண்மனை அமைய இருக்கும் இடத்திலும் மனிதப் புதைகுழி இருக்கலாமென்று ஊகம் வெளியிட்டவர்கள், இப்போது 350 எலும்புக் கூடுகளைத் தாண்டிய போதும் இது குறித்து எதுவும் பேசாமல் மௌனம் காப்பது எதற்காக?

ஆக, நல்லூர் இராசதானியின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் பெயரால் ஓர் அரண்மனை அமைவதை விரும்பாத - அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்ற ஒரு கூட்டத்தின் கூப்பாடு தான் அதுவன்றி மற்றும்படி செம்மணி மனிதப் புதைகுழியின் கொடூரம் கண்டோ அல்லது எங்கள் இனத்திற்கு கடந்தகால ஆட்சியாளர்கள் இழைத்த துரோகத்தனம் கண்டோ மேற்குறிப்பிட்ட தரப்பினர் குரல் கொடுக்கவில்லை என்பது இப்போது தெளிவாகிறது.

பரவாயில்லை எங்கள் தமிழினம் விடிவு காண வேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்ட போதிலும் அந்த விடியலை ஏதோவொரு வகையில் இருளாக்கிய நம் அரசியல் தரப்புகளிடமும் சிவில் சமூகம் சார்ந்த அமைப்புகளிடமும் தமிழர் விடயத்தில் எப்போதும் சுயநலமும் பணநலமுமே மேலோங்கி இருந்தது.

ஆகையால் அதுபற்றி இவ்விடத்தில் கதைத்துக் காலம் போக்குவதை விட, தமிழ் மக்கள் ஒன்றாக இணைந்து செம்மணி மனிதப் புதைகுழியின் கொடூரத்தை நேரில் வந்து பார்வையிடுமாறு அத்தனை சர்வதேச தொண்டு நிறுவனங்களிடமும் வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் கேட்க வேண்டும்.

# சுரேஷ் சலே மீது எந்தவிதமான சித்திரவதைகளும் இடம்பெறவில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து மீண்டும் விசாரணைகள் நடத்தப்படுவது அரசியல் நோக்கங்களுக்காக அல்ல. முன்னாள் புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே சிறைச்சாலையில் உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சிறையில் வைக்கப்பட்டுள்ள அவருக்குத் தேவையான அடிப்படை மற்றும் தேவையான வசதிகள் அனைத்தும் முறையாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ள பின்னணியில், இத்தகைய சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் வெறும் போலி வதந்திகளாகும்.

குறிப்பாக அவருக்கு அண்மையில் பல் மற்றும் கண் தொடர்பான மருத்துவப் பிரச்சினைகள் ஏற்பட்ட போது அவற்றுக்கான முறையான சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளன. அவர் துன்புறுத்தப்படுவதாக இருந்தால் ஏன் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுப்பப்பட வேண்டும். அவரது குடும்பத்தினர் அவரை நேரில் சந்திப்பதற்கும் வீட்டிலிருந்து சமைத்த உணவைக் கொண்டு வந்து கொடுப்பதற்கும் முழுமையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து மீண்டும் விசாரணைகள் நடத்தப்படுவது அரசியல் நோக்கங்களுக்கானது அல்ல. இதன் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரியை கண்டறிவதே இதன் பிரதான நோக்கம் ஆகும்.

அரசாங்கம் தேர்தல் மேடைகளில் மக்களுக்கு அளித்தவாக்குறுதிகளுக்கு இணங்க, இந்த விவகாரம் குறித்து ஒரு முறையான மற்றும் புதிய விசாரணையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தற்போது எடுக்கப்பட்டுள்ளது என்றார். (க-7)

## தேர்தலில் தோற்ற மகிந்த தரப்பு ஆட்சியைத் தரக் கோருவது வேடிக்கை

### இளங்குமரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் வாக்குகளால் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது எனத் தெரிந்து தேசிய மக்கள் சக்தியிடம் ஆட்சியைத் தா என மகிந்த தரப்பு கேட்டு நிற்கிறது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத் திறப்புவிழாவில் கலந்து கொண்ட வேளை களுத்துறையில் நடந்த நிகழ்ச்சியொன்றில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்ட போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைத் தங்களிடம் தருமாறு மகிந்த தரப்பு கோரியுள்ளது. இந்த அரசாங்கம் நாட்டு மக்கள் வாக்களித்து ஜனநாயக ரீதியாக அமைந்த அரசாங்கம். அவர்கள் இனி தேர்தலில் வெல்ல முடியாது எனத் தெரிந்து கொண்டு எம்மிடம் ஆட்சியை கேட்கின்றார்கள்.

எங்களுடைய அரசாங்கம் ஊழல் வாதிகளை தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்து வருகிறது.

மக்களின் பணத்தை சூறையாடியவர்கள் ஆட்சிக்காக பல கொலைகளைச் செய்தவர்கள் இன்று மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு வருகின்றனர். அதனால் அவர்கள் மீண்டும் மக்கள் வாக்குகளால் ஆட்சிக்கு வர முடியாது. அதனால் எம்மிடம் ஆட்சி அதிகாரங்களைத் தாருங்கள் என கேட்டு நிற்கின்றனர் என்று அவர் தெரிவித்தார். (க-7)

## தீவகத்தை அச்சுறுத்திய மாட்டுத் திருட்டுக் கும்பல் கைது

(வேலணை)

வேலணையை அச்சுறுத்தி வந்த பிரதான மாட்டு திருட்டுக் கும்பல் நேற்று முன்தினம்(13) கூண்டோடு கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் கூறுகையில்,

வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் நீண்டகாலமாக பண்ணையாளர்களின் பெறுமதிமிக்க கறவை மாடுகள் மற்றும் வீடுகளை உடைத்து நகை [illegible] பெறும [illegible] பொருட்களை திருடிவந்த குழுவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

கைதான பிரதான சூத்திரதாரியிடம் 2300 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில், ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் அதிகாரி அஜித்குமார், ஊர்காவற்றுறை குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வினோத் ஆகியோரது பிரசன்னத்துடன் குறித்த நடவடிக்கை [illegible] மை [illegible]. (க-7)

## உழவு இயந்திரம் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தின் வனாதவில்லுவ மயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உழவு இயந்திரத்தின் கீழ் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 30 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கூலி அடிப்படையில் மற்றொருவருக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தை இயக்கி வயல் உழும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சம்பவத்தன்று வயல் உழும் பணியை நிறைவு செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது, உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து வயல்களுக்கு நீர் கொண்டு செல்லும் கால்வாய்க்குள் கவிழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, அதிக வேகத்தில் பயணித்ததே இந்த விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தின் போது சாரதி உழவு இயந்திரத்தின் அடியில் சிக்கிய நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனாதவில்லுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனி மாத இராசி பலன்கள் (15.06.2026 - 16.07.2026வரை)

## அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம்



**மேஷ இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குரு 4 ஆம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரோடு சுக்ரனும் இணைந்திருக்கிறார். அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும், அவரது பார்வையால் நல்ல பலன்கள் உங்களுக்கு வந்திணையும். இருப்பினும் உடல்நலத்தில் மட்டும் சிறுசிறு தொல்லைகள் வந்து அலைமோதும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும்.

பயணங்கள் பலன்தரும். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் சூழ்நிலை உண்டு. சுபச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதோடு கூடுதலான பொறுப்புகளும் வந்துசேரும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5 ஆம் திகதி (19.6.2026) அன்று ரிஷப இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசி நாதனான அவர் தனஸ்தானத்திற்கு வருவது நல்ல நேரம் தான். பொருளாதார நிலை சிறப்பாக அமையும். நாலாபுறமும் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். இடம் வாங்குவது, பூமி வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். தொழிலில் இதுவரை ஒத்துவராத கூட்டாளிகள் இப்பொழுது ஒத்துவருவர். மேல் முதலீடு செய்து தொழில் வளர்ச்சி பெருக வழிவகுத்துக் கொடுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிநிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வரும்.

**சிம்ம - சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரித்து வரும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். அங்குள்ள கேதுவோடு இணைந்து சஞ்சரிக்கப் போகிறார்.

வாழ்க்கைத் துணையோடு கொஞ்சம் விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் குறையைத் தீர்க்க அதிகம் செலவிடுவீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புகழ்மிக்க ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடிய வழிபிறக்கும். பூர்வீக சொத்துக்களை பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் இருந்த தொய்வு அகலும். சக பணியாளர்களின் ஆதரவோடு முன்னேற்றம் காண்பீர்கள்.

**சனி வக்ரம்**

ஆனி 31 ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். தொழில் ஸ்தானம் மற்றும் லாப




ஸ்தானத்திற்கு அதிபதியான அவர், வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அதே சமயம் குருவின் பார்வை சனியின் மீது பதிவதால் அதன் கடுமை குறையும். எனவே தொழிலில் இருந்த குறுக்கீடுகள் படிப்படியாக அகலும்.

சனியின் பார்வை 2, 6, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. வக்ரம் பெற்ற சனியின் பார்வை என்பதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். நிம்மதி கிடைக்க குலதெய்வப் பிரார்த்தனைகளையும், இஷ்ட தெய்வப் பிரார்த்தனைகளையும் மேற்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். அதேசமயம் பெற்றோர் வழியில் கொஞ்சம் ஆதரவு குறையலாம். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டிய நேரம் இது. கூட்டாளிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க அவ்வப்போது கணக்குகளை சரிபார்த்துக் கொள்வது நல்லது.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு தலைமைப் பொறுப்புக்கள் தானாக தேடி வரலாம். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு கூடுதல் லாபம் வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். இம்மாதம் நடராஜர் வழிபாடு நன்மையை வழங்கும்.

**பணத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 15, 18, 19, 29, 30, ஜூலை: 5, 6, 11, 12, 15, 16.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:** மஞ்சள்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அதேசமயம் 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. இந்த இரண்டு முரண்பாடான கிரகங்களும் ஒன்றாக இணைந்து 15.6.2026 முதல் 4.7.2026 வரை கடக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக திடீர் திடீரென மாற்றங்களும், ஏற்றங்களும் வந்துசேரும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை தனாதிபதியாக சுக்ரன் விளங்குவதால் திடீர் பணவரவு உண்டு. எந்த நேரமும் கையில் பணப்புழக்கம் இருக்கும் என்பதால், நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்துமுடிப்பீர்கள். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்



**ரிஷப இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்ற குருவோடு கூடி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே உடன்பிறப்புகள் வழியில் உதவி கிடைக்கும். பொருளாதாரப்பற்றாக்குறை அகலும்.

புதுமுயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சென்ற மாதத்தில் நிறைவடையாத சில காரியங்கள் இம்மாதத் தொடக்கத்தில் இருந்து படிப்படியாக நடைபெறத் தொடங்கும். உத்தியோகத்தில் சம்பள உயர்வுடன் கூடிய வேலைக்காக செய்த முயற்சி கைகூடும். பிள்ளைகள் வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுபகாரியம் இம்மாதம் முடிவடையும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5 ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய், உங்கள் இராசிக்கு வருகிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும்போது விரயங்கள் அதிகரிக்கும். நல்ல காரியங்கள் நடப்பதற்காகவும், நாகரிகப் பொருட்கள் வாங்குவதற்கும் செலவிடுவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகாவிட்டாலும், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவரும். எதிர்பாராத உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள். தொழில் வளர்ச்சிக்காக மூலதனம் செய்ய ஏதேனும் சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். சுபச்செலவுகள் வரும் வாய்ப்பு உண்டு. தூரதேசப்பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தென்படும்.

**சிம்ம- சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரித்து வரும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான சுக்ரன்,

## மூன்றாம் இடத்து குருவால் முன்னேற்றம்

சுகஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். இடம், வீடு வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். உறவினர்கள் மதிக்கும்படி உங்கள் வாழ்க்கை மாறும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பிவந்து சேருவர். கருத்து வேறுபாடு நீங்கி கலகலப்பான சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்று, சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

**சனிவக்ரம்**

ஆனி 31 ஆம் திகதி (15.07.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமாக அவர் இருக்கிறார். அதோடு உங்கள் இராசிக்கு அஷ்டம-லாபாதிபதியாகவும் விளங்குவதால், அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மை தான். என்றாலும், சனி பகவான் லாபாதிபதியாகவும் இருப்பதால், இந்த வக்ரமானது அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் குருவின் பார்வை சனியின் மீது பதிவதால், அதன் கடுமை கொஞ்சம் குறையும்.

உங்கள் இராசிக்கு 1, 5, 8 ஆகிய




இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே அந்தந்த இடங்கள் புனிதம் அடைகின்றன.

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமாக சனி விளங்குவதால் அதன் பார்வையால் நன்மையே அதிகம் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவு நனவாகும். முயற்சிகள் கைகூடும். பூர்வீக சொத்துப் பிரச்சினை அகல, பாகப் பிரிவினைக்கு செய்த முயற்சி கைகூடும். வீட்டில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிகார அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டு நல்ல முன்னேற்றம் காண்பர்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு இப்பொழுது கிடைக்கும். கலைஞர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் தேடி வரும். மாணவ - மாணவிகளுக்கு ஆசிரியர்களின் ஆதரவு உண்டு. பெண்களுக்கு குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். இம்மாதம் அபிராமி அம்மன் வழிபாடு ஆனந்த வாழ்வை வழங்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 16, 17, 20, 21, ஜூலை: 3, 7, 8, 13, 14.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** ஆரஞ்சு.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

15.6.2026 முதல் 4.7.2026 வரை கடக இராசியில் உச்சம் பெற்ற குருவோடு இணைந்து சுக்ரன் சஞ்சரிக்கிறார். தேவகுரு அசுரகுரு இருவரும் இணைந்து சஞ்சரிக்கும்போது, மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். பெண் வழிப் பிரச்சினை அகலும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரிய ஏற்பாடு செய்தும், இதுவரை அழைப்பு வரவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, உயர் அதிகாரிகள் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாதாள...

மேலதிக விசாரணைகளுக்காக விசேட புலனாய்வு பிரிவுகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை (13) இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மோதர நிபுண என்பவரின் சகோதரரான மோதர சதுர மற்றும் புளுமெண்டல் சங்க என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

25 வயதான மோதர சதுர மேலதிக விசாரணைகளுக்காக நேற்று முற்பகல் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே புளுமெண்டல் சங்க கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இருவரிடமும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க-7)

## கோப்பாய்...

யாழ்ப்பாணம் - கோப்பாயில் பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டிடம் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியாவால் நேற்று திறந்து வைக்கப்பட்ட நிலையில் அந்த நிலையத்தின் முன்றலில் ஏற்றப்பட்ட கொடி பலரின் அவதானத்தை பெற்றுள்ளது.

அந்த கொடியில் இலங்கைப் பொலிஸின் வழமையான சின்னத்துடன் நந்தியின் சின்னமும் யாழ்ப்பாணப்பிரிவு என்ற வாக்கியங்களும் இடம்பெற்றிருந்தன.

இதுவரை யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்கான ஒரு கொடி பகிரங்கமாக காட்டப்படாத நிலையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் பண்டைய வரலாற்றுடன் தொடர்புடைய தமிழரின் அடையாளமான நந்திக் கொடி ஏற்றப்பட்டிருந்தமை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (க-7)

## பிரபல்யமான...

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய்பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், என்னுடைய முக்கிய நோக்கம் இந்த பகுதியில் பொதுமக்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்கள் சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதாகும்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த நாங்கள் பொலிஸாருக்குக் கட்டளை இடுகின்றோம்.

எங்களுடைய பிரதான நோக்கம் கட்சி ரீதியான, மத ரீதியான எந்த ஒரு பிரிவினைவாதம் இல்லாத அனைவரும் ஒன்றாக வாழும் ஒரே இனம் என்ற ரீதியில் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதாகும்.

வடக்கில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை கடந்த காலங்களில் எடுத்தோம். இதனால் வடக்கில் பல சட்டவிரோத செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து சட்டவாட்சியை நடைமுறைப்படுத்த ஒத்துழைத்து வருகின்றனர். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற எந்தப் பாகுபாடு இன்றி அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டமே நடைமுறையில் உள்ளது.

தெற்கு அரசியல்வாதிகள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதமாக கருத்துக்களை தெரிவிக்கின்றனர். ஆனால் நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க நாம் அனுமதிக்க மாட்டோம்

வடக்கில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி மக்களை சந்தோசமாக, சுதந்திரமாக வாழவைப்போம்.

எளியோருக்கு ஒரு நீதியும் பிரபலமானவர்களுக்கு ஒரு நீதியும் என இந்த நாட்டில் இல்லை. அனைவருக்கும் பொதுவான நீதியே உண்டு. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு என்ற வகையில் அனைவருக்கும் சட்டம் சமம் என்பதையும் பொலிஸார் பாரபட்சம் இன்றி சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் பணித்துள்ளோம்.

கட்சி, ஜாதி, இனம், மதம் என்ற எந்த வேறுபாடுகளும் இன்றி அனைவரும் ஒரே இனம் என்ற சூழலை உருவாக்க வேண்டும். இந்த நாட்டில் மீண்டும் இனங்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்படமாட்டாது.

பிரிவினை வாதம் வேறுபாடுகள் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது. அவ்வாறான நிலை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படக்கூடாது. எமது பிரதான நோக்கம் எதிர்கால சந்ததியின் ஒற்றுமையான வாழ்வே.

அதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளுக்கு தீர்வு கிடைக்காவிடின், உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். அல்லது பொலிஸ் மா அதிபருக்கு சொல்லுங்கள். தமக்கான நீதியினை பெற்றுக்கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு.

வடக்கில்மொழி பிரச்சினை இன்றி சேவைகளை பெற நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று வடக்கில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வடக்கில் சிறப்பான சேவையைமேலும் மேம்படுத்தவும் வடக்கில் உள்ள இளையோர்கள் தாமாக முன்வந்து பொலிஸ் சேவைகளில் இணைய வேண்டும் என்றார். (க-7,33)

## செம்...

இரண்டு என்புகூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிமனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 24ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றது.

அதன் போது ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் குழந்தை ஒன்று, நான்கு சிறுவர்களுடைய என்புக் கூடுகள் உட்பட 07 என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இரண்டு என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இதுவரையிலான அகழ்வுப் பணிகளின் போது, 355 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 341 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்தவார அகழ்வுப் பணிகளில் ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.06.14 — சீட்டிழுப்பு இலக்கம் 6218 — V 6 9 0 6 9 9
அத சம்பத — V 0 6 9 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0793

சுப தவசக் — திகதி 2026.06.14 — சீட்டிழுப்பு இலக்கம் 8334 — துலாம் 11 47 57 — 8923

தன நிதானய — திகதி 2026.06.14 — சீட்டிழுப்பு இலக்கம் 2248 — Q 10 36 37 65 Q — ஞாயிறு போனஸ் இலக்கம் 1102

மெகா பவர் — திகதி 14/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2566 — U 15 01 04 30 72

ஜய — திகதி 2026.06.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0486 — A 0 4 4 4 — ஞாயிறு போனஸ் இலக்கம் 3506

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4460 — சீட்டிழுப்பு திகதி 14.06.2026 — C 23 37 49 66

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1527 — மேடம் 03 08 41 45 மேடம்

சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 14.06.2026 — வெற்றி வாரம் 0926 — U 4 3 4 4 5 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,419,548.00

Super Ball — சீட்டிழுப்பு வாரம் 3192 — 25000 பணப் பரிசு 32095 — சீட்டிழுப்பு திகதி 2026.06.14 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 33 60 63 64 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 134,476,372.00

சனிதா — திகதி 14.06.2026 — வெற்றி வாரம் 5353 — 16 64 67 68 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,130,735.60 — 28772

சசிரி — வெற்றி வாரம் 1022 — சீட்டிழுப்பு திகதி 14.06.2026 — ஞாயிற்றுக்கிழமை — 15 17 38 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,431,760.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4904 — சீட்டிழுப்பு திகதி 14.06.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 06 09 30 38 மேடம் — அந்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்ன வாசனா — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — A 18 24 25 27 50 — 2368 — 14.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.292,807,914.80

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 3018 — சீட்டிழுப்பு திகதி 2026.06.14 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,089,696.80 — 15 26 47 66 O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு...

முதல் நாடு தழுவிய ரீதியில் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இந்த விசேட தூய்மையாக்கல் வேலைத்திட்டம், எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடரவுள்ளது.

அத்துடன் 18ஆம் திகதி பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் விசேட வேலைத் திட்டமும் ஜூன் 19ஆம் திகதி அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களைச் சுற்றியுள்ள வளாகங்களைத் தூய்மைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் இறுதி நாளான ஜூன் 20ஆம் திகதியன்று, பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சூழலைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் இந்த தேசிய வேலைத்திட்டத்திற்குப் பொதுமக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க-7)

## வவு...

நேற்று ஞாயிற்றுக்கிழமை குறித்த அமைப்பின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக மன்றத்தின் செயலாளர் ஜெயசேகரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் நியமனத்தில் தமிழர், முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதேசமாகக் கருதி, அரச அதிபர் நியமனத்தில் தகுதியானவரை விரைந்து நியமிக்குமாறு குறித்த நிகழ்வில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.சிறிபவானந்தராஜா, சமயத்தலைவர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-7)

**வெறுப்பை நிராகரித்து மனிதநேயத்தை உயர்த்துவோம்**

ஒவ்வொரு தகவலும் பகிரப்பட வேண்டியது அல்ல.

தீர்மானத்தை மீறிய உணர்ச்சிகளால் வெறுப்பான தகவல்கள் வேகமாக பரவுகின்றன.

மக்களை உயர்த்தும், சமூகங்களை வலுப்படுத்தும் மற்றும் மரியாதையை வளர்க்கும் தகவல்களை தெரிவு செய்து பகிருங்கள்.

நாம் விழிப்புணர்வுடன் வெறுப்பை நிராகரிப்போம்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5841)

076 825 7716 (ஆகாஸ்)

**மணப் பெண் தேவை**


1. காரைநகர், இந்து, 1996, சித்திரை, Masters, Cyber Security Analyst and Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58773)
2. சாவகச்சேரி, இந்து, 1995, புனர்பூசம், Computer Science & Engineering, Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54523)
3. இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of Civil Engineeering, Civil Engineer, Asutralia Citizne மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54449)
4. அல்வாய், இந்து, 1990, மூலம், Bachelor of Administration, Own Internet Company, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52911)
5. காரைநகர், இந்து 1991, அனுஷம், Civil Engineering, Engineer, Singapore Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55580)
6. உரும்பிராய், இந்து, 1992, உத்திரட்டாதி, BSc (Hons) and Phd, Lecturer, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54236)
7. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், BSC Engineering, Engineer, Australila Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55831)
8. துன்னாலை, இந்து, 1984, மூலம், BSc (Hons) in Accounting and Masters, Manager, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49931)
9. நல்லூர், இந்து, 1982, பூரட்டாதி, Degree Holder, Own Business, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57445)
10. சாவகச்சேரி, இந்து, 1980, சித்திரை, Computer Science, Property Manager, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56286)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற Website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P 077 189 0367
www.thaalee.com (C-5840) 074 387 3686

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 16.05.2026 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் பஞ்சாட்சரம் வசந்தன்

அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 15.06.2026 திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித நீரில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய மற்றும் மதியபோசன நிகழ்வுகளில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தி பெற வேண்டும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(2419)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.19, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.